பக்கங்கள் 8

# ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 21 | தை 9 ரபி-அவ் 4 | இதழ் 345
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 23-1-80

RECEIVED 1980-1-23 PERIODICALS DIVISION LIBRARY UNIV. CAMPUS

## கேரளாவில் மீண்டும் இடதுசாரி ஆட்சி!
### இந்திராகாங்கிரஸ் எதிர்க்கட்சி! ஜனதாவுக்கு படுதோல்வி

(புதுடில்லி)

கேரளமாநில சட்டசபைத் தேர்தலில்; இடதுசாரி ஜனநாயகமுன்னணிஅறுதிப்பெரும் பான்மை பெற்றுள்ளது.

140 தொகுதிகளைக்கொண்ட கேரளசட்டசபையில், நேற்று இரவுவெளியான 104 தொகுதிகளுக்கான முடிவுகளில், இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் அமைந்த இடதுசாரி ஜனநாயகமுன்னணிக்கு 71 ஸ்தானங்களும்,

(8-ம் பக்கம்பார்க்க)

★ மிளகாயை பதுக்கிவைத்து தட்டுப்பாடு ஏற்படுத்தும்

# கொள்ளைலாப வர்த்தகர்கள்

# சிறையில் தள்ளப்படுவார்கள்!

## வர்த்தகர்கள் கருத்தரங்கில் அமைச்சர் லலித்அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

''வர்த்தகர்கள், உற்பத்தியாளர்களிடம் மிளகாயை வாங்கி, உடனுக்குடன், அன்றுள்ள விலையில் விற்பனை செய்வதிலே தவறில்லை. ஆனல், மிளகாயை வாங்கி பதுக்கிவைத்து இயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்திய பின்னர் பாவனையாளர்களுக்குக் கூடிய விலைக்கு விற்றுக் கொள்ளைலாபம் அடிக்கும் வர்த்தகர்களை சிறைக்கு அனுப்புவேன்''

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடந்த யாழ் மாவட்ட வர்த்தக கருத்தரங்கில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு கூறினர்.

அமைச்சர் லலித்அத்துலத்முதலி, மாவட்ட அமைச்சர் திரு. யூ. பீ. விஜயகூன், அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி ஆகியோர் மண்டப வாசலில் மாலைகள் சூட்டி மேளவாத்தியத்துடன் மேடைக்கு அழைத்துவரப்பட்டனர்.

### தமிழில் உரையாற்றினர்

அமைச்சர் லலித் அத்துலத்முதலி தேசியக்கொடியை ஏற்றிவைத்தபின்னர் மங்கள விளக்கேற்றி கருத்தரங்கை ஆரம்பித்துவைத்தார்.

இலங்கை வணிகர் சங்க செயலாளர் திரு. வை. பி- முத்துக்குமாரன் தலைமையில் நடந்த இக் கருத்தரங்கில் அமைச்சர் லலித்அத்துலத்முதலி முதலில் 15 நிமிடங்கள் தமிழில் உரையாற்றினர். அதன்பின் சிங்களத்திலும், பின் ஆங்கிலத்திலும் உரையாற்றினர்.

### யாழ். அரசஅதிபர் வரவேற்றர்

யாழ்ப்பாண அரசாங்க அதிபரும், மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு.யோகேந்திரா துரைசுவாமி,அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியை வரவேற்றுப்பேசுகையில்,நிதானமான ஒரு வர்த்தக கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிப்பதன்மூலம் சகல தரப்பினருக்கும் பெருநன்மை கிடைப்பதுடன், பாதுகாப்பும் அளிக்கப்படுகிறது என்றும், அரசாங்கத்தின் கொள்கையின்படி, உற்பத்தியர்ளர்கள், வர்த்தகர்கள் மட்டுமின்றி பாவனையாளர்களும் பாதுகாக்கப்படுகின்றனர் என்றும், இந்த மூன்று தரப்பினரும் சரிசமமாகப் பாதுகாக்கப்படுவது ஒரு - நேர்மையான நிதானமான வர்த்தகக்கொள்கையாகும் என்றும் யாழ்.அரச அதிபர் கூறினர்.

அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி கூறியதாவது: ''பாவனையாளர், உற்பத்தியாளர், வர்த்தகர்கள் ஆகிய மூன்று பகுதியினரையும் நான் நேரில் சந்தித்தேன். மூன்று பகுதியினரும் தங்களுக்கென ஒரு கூட்டுறவு அமைப்பை தனித்தனியாக அமைத்துக் கொள்ளவேண்டும்.

### அரசின் கொள்கை

''எமது அரசின் வர்த்தகத் துறைக் கொள்கை யாதெனில் தனியார்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதிலும் பார்க்க, கூட்டுறவாக இயங்கும் சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தினல் நல்லதாக இருக்கும்.

நான் யாழ்ப்பாணத்தில் தங்கிய மூன்று நாட்களில், பாவனையாளர், உற்பத்தியாளர், வர்த்தகர் ஆகியோரின் பிரச்னைகளை அறிந்துகொண்டேன்.

### கோட்டா கிடையாது

வர்த்தகரைச் சந்திக்கும் திட்டத்தை ஒன்றரை வருடத்திற்குமுன் ஆரம்பித்தேன். கடந்த ஒன்றரை வருடத்திற்குமுன்னர் வர்த்தகர்கள் கோட்டாமூலம் பொருள் தருமாறு கேட்டார்கள். இன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனு ஒன்றில் கோட்டா முறை பற்றி தெரிவிக்கவில்லை. நான் இந்த அமைச்சில் இருக்கும் வரை கோட்டா முறையை கையாளமாட்டேன்.

''பாவனையாளருக்கு நல்ல முறையில் நீங்கள் உதவினல் உங்களுக்கு உதவியளிப்போம். எல்லோருக்கும் பொருட்களை கொடுத்துதவி வியாபார முறையை நடத்துவோம், எமது கொள்கைகள் மூலம் நஷ்டத்தை கொண்டுவரவிடமாட்டோம். பாவனையாளருக்கு நன்மையளிக்கும்விதத்

(8-ம் பக்கம் பார்க்க)

## தீ விபத்தில் ரூ. 10 லட்சம் சேதம்!

(கொழும்பு)

கொட்டாஞ்சேனையில் நேற்று நள்ளிரவில் இடம் பெற்ற தீவிபத்தில் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து சாம்பராயின.

கொட்டாஞ்சேன சங்கராஜமாவத்தை பரடைஸ் பிளேஸில் உள்ள கழிவுக்கடதாசிகள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியத்தில் நேற்று நள்ளிரவு 12-30 மணிக்கு இத்தீவிபத்து இடம் பெற்றதாகவும், இத் தீ அருகில் உள்ள 9 கட்டிடங்களுக்கு பரவியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தீவிபத்தில் தேயிலை தேயிலைபெட்டிகள் ரப்பர் மலைத்தியோன் ஆகியனவும் சேதமடைந்துள்ளன. (இ)

### கொம்பனித்தெரு

## கோஷ்டி மோதலில் நால்வர் பலி!

### விசாரணைநடத்தஜனதிபதிஆணைக்குழு

(கொழும்பு)

கொம்பனித் தெருவிலுள்ள ஒரே சமூகத்தைச் சேர்ந்த இருபிரிவினருக்கிடையில் எற்பட்ட குழப்பத்தில் நால்வர் பலியானர்கள்.

சம்பவம் நடந்த இடத்திற்கு நேற்று ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இச்சம்பவம் குறித்து விசாரணை செய்ய ஒரு ஆணைக்குழு நியமிப்பதாக ஜனதிபதி அப்பகுதி மக்களுக்கு உறுதியளித்தார்.

உடமைகளுக்கு ஏற்பட்டுள்ள சேதத்திற்கு நஷ்டஈடு வழங்க ஏற்பாடு செய்யப்படவிருக்கிறது.

இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் ஜனதிபதி உறுதியளித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர்.

விவசாயிகளே! நீங்கள் எதிர்பார்த்த அற்புதமான, சிக்கனமான, சக்திவாய்ந்த சர்வபூச்சிநாசினி வந்துவிட்டது!!

நெல், உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், மரக்கறிவகை, புகையிலை ஆகிய எல்லாப் பயிர்களையும் பாதிக்கும் எல்லாப் பூச்சி, புழுக்களையும் உடனே கட்டுப்படுத்துவதுடன் நீடியகாலம் தங்கும் தன்மையும் தரும்.

பரத்தியன் 63

450 மிலி மீற்றர், 225 மிலி லீற்றர் போத்தல்களில் கிடைக்கும்.

கிடைக்குமிடம்:
அக்ரேஸ் லிமிட்டெட்,
56, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.

ஏகவிநியோகஸ்தர்கள்:
ஜெகெம்
39, பிறிஸ்டல் பில்டிங்,
51, யோக் வீதி, கொழும்பு.
தொலைபேசி: 24353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

தண்ணீர் இறைக்கும் பம்புகள் பொருத்துவதிலும், திருத்துவதிலும் தகுந்த அனுபவமுள்ள தொழிலாளர்கள் உடனேதேவை. 24-1-80 வியாழன் 25-1-80 வெள்ளி ஆகிய தினங்களில் காலை 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் சான்றிதழ்களுடன் நேரில் வரவும். யுனைட்டட் அக்ரோ என்ஜினியரிங், (சிக்மா) நாவற்குழி, கைதடி. 4758

சைக்கிள் மூலம் சிகரட்ஸ் விற்பனை செய்வதற்கு அனுபவமுள்ள 30 க்கும் 40 வயதுக்கு மிடைப்பட்ட விற்பனையாளர் தேவை. சம்பளம் மொத்தம் ரூபா 334/- 5-2-80 க்கு முன் விண்ணப்பிக்கவும். வசந்தா ஸ்ரோர்ஸ், ஊர்காவற்றுறை. 4731

## சோதிடம்

ஓர்முறை சந்தித்துப் பாருங்கள்? கைரேகை, சாதகம், பொருத்தம், சோதிட வித்தகர் வ. கந்தையா, சரவணபவன் சோதிட நிலையம், சங்கிலிக் கிணத்தடி, அல்லாரை தெற்கு, கொடிகாமம். 4747

## விற்பனைக்கு

9 ஸ்ரீ இலக்கத் தொடர் கொண்ட நல்ல நிலைமையிலுள்ள வொக்ஸ் வகன் மோட்டார் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 221, நாவலர் வீதி, (பிறவுண்வீதி - நாவலர் வீதி சந்திப்பு) யாழ்ப்பாணம். 4753

2000 வெற்றுச் சாக்குகள் வரை விற்பனைக்குண்டு. தொடர்பு: மனேஜர், ஏ. பவர் அன் கொம்பனி லிமிட், 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4739

EL தொடர்பிலக்க வொக்ஸ் வாகன் (Volkswagon) 38-42 M. P. G. நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; விற்பனை முகாமையாளர், தமிழன்ஸ் கம்பனி லிமிட்டெட், 191, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். போன்: 7680 (4746)

பூவராயன் கலட்டியில் 3 பரப்பு தோட்டக்காணி பாதை வசதிகளுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும் த. சிவலிங்கம், வீரமனை, குப்பிழான். 4738

# கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: ஈடு / 446.

தம்பு செல்லையா, பளம் ரோட், ஆனைக்கோட்டை. - வழக்காளி.

எதிராக

1. அந்தோனிமுத்து அருளப்புவும்,
2. பெண் விக்ரோறியாவும் இருவரும்

சவுக்காலை ரோட், நாவாந்துறை வடக்கு, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் ஈடு / 446-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1980-ம் வருஷம் மாசி மாதம் (11-2-1980) 11-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் இந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 12000/-ம் 1977-3-28 தொடக்கம் 1977-11-4 வரைக்கும் ரூபாய் 4000/-க்கு 24 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 9வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 543/95.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை பராயடி நில பர. 3/8 இதில் தெற்குப் பக்கமாக அரைவாசிக்கு நில பரப்பு பதினாறில் மூன்றும் (3/16) வீடும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு:ரோட்டு. வடக்கு: சந்தியோ ஆரோக்கியநாதன் பெண் மாணிக்கம்மாவுக்கும் பங்காளருக்கும் உரியஆதனம். தெற்கு: சூசை கைம்பெண் தங்கம்மாவுக்குரிய ஆதனம், இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

**எஸ். சங்கரப்பிள்ளை ஜே. பி.,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.

வேல்பதி,
புத்தூர்.
19-12-79. 4748

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்தார்த்தி ஆண்டு தைத்திங்கள் 14-ம் நாள் (28-1-1980) திங்கட்கிழமை காலை 10-00 மணி முதல் 11-02 வரையுள்ள சுபவேளையில்

| மணமகன் | மணமகள் |
|---|---|
| **புஸ்பநாயகம்** | **சுலோசனாதேவி** |

ஆகியோருக்கு

மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமணத்திற்கு அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| K. பொன்னம்பலமும் | திருமதி |
| [illegible]யாரும், | P. வேலுப்பிள்ளை, |
| புதுவளவு, | C/o. T. K. துரைராஜசிங்கம், |
| கோப்பாய். | புகையிரத வீதி, |
| | தெல்லிப்பழை. |

குறிப்பு: மணமகனில்லத்தில் 29-1-1980 மாலை வரவேற்பு உபசாரம் நடைபெறும்.
4741

# புதிய விற்பனை ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர் மடத்தைச் சேர்ந்த திரு. ரி. கனகராஜா, யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தினால் புதிய விற்பனை ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. கனகராஜா அண்மையிலேயே அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

சமூக சேவையில் பெரிதும் ஈடுபாடு கொண்ட இவர் யாழ் இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சபையின் செயலாளராகவும், யாழ். மாவட்டச் சாரணர் சங்கத்தின் செயலாளராகவும் கந்தர்மடம் ப. நோ.கூ.சங்கத்தின் தலைவராகவும், நாவற்குழி வீடமைப்புத்திட்டத்தின் தனுநிகாரியாகவும் பணியாற்றி வருகின்றார். (இ)

......

# பால் சேகரிப்பு நிலையம்

(மட்டுநகர்)

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை இலுப்படிச்சேனை கிராமத்திற்கு பால் சேகரிப்புநிலையமொன்றை அண்மையில் திறந்து வைத்ததோடு 100 சுய வீடுகளுக்கான வீடமைப்புத் திட்டத்திற்கான அத்திபாரக் கல்லையும் நாட்டி வைத்தார். (கு)

# பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல 84அ- பிரிவுகள் 524,532)

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கரவெட்டி வடக்கிலிருந்து நாகமுத்து நடராசா என்பவரின் மரணசாதனமில்லாச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் நாகமுத்து நடராசா கைம்பெண் நாகமுத்து, கரவெட்டி வடக்கு. மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 1088

1. நடராசா மகள் மனோரஞ்சினி,
2. நடராசா மகள் மனோராணி,
3. நடராசா மகள் மனோகரி,
4. நடராசா திருகுலேந்திரன், - கரவெட்டி வடக்கு,
5. நடராசா குகநேசன், கரவெட்டி வடக்கு,
6. வல்லிபுரம் சுப்பையா, பன்னிசுட்டான், கண்டாவளை,
7. குமாரு இரத்தினம் கைம்பெண் செல்லப்பாக்கியம்,
8. நாகமுத்து வேலாயுதம், கரவெட்டி வடக்கு.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு தை மாதம் 25-ஆந் நாளன்று முற்பகல் 9-30மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
**க. விஸ்வலிங்கம்,**
பதிவாளர்

தயாரிப்பு:
**க. வ. சுப்பிரமணியம்**
சட்டத்தரணி.

1979-ஆம் ஆண்டு மார்கழி மாதம் 7-ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 4744

# ஆண்டுவிழாவும் சிவராத்திரி விழாவும்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு இறுப்பிட்டி ஐங்கரன் இளைஞர் மன்றத்தினரின் இரண்டாவது ஆண்டுவிழாவும் மகாசிவராத்திரி விழாவும் கொண்டாடவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை மன்றத் தலைவர் திரு. து. கணேசலிங்கம் துரிதமாக மேற்கொண்டு வருகிறார்.

விநாயகர் உற்சவ காலத்தில் அடியார்களுக்குத் தாகசாந்தி அளிக்கவும் மன்றம்நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஆலய உற்சவம் நேற்று ஆரம்பமானது. (அ)

# கேள்வி விளம்பரம்

1980-ப் ஆண்டு பெப்ரவரி மாதம் 6-ந்திகதி பகல் 12மணி வரை சீலவைத்த கேள்விகள் கீழ்க்காட்டப்படும் கடைகளுக்கு கேள்வி மூலம் கொடுப்பதற்கு என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். அல்லது இச்சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படவேண்டும். கேள்விப் பத்திரம் 05-02-1980-ம் திகதி பகல் 12-00 மணி வரை வழங்கப்படும். கேள்விக்காரர்கள் தங்களை அத்தாட்சிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பித்து கேள்விப்பத்திரத்தைப்பெற்றுக் கொள்ளவேண்டும். மேலதிக விபரங்களை இக் காரியாலயத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

| | கோண்டாவில் கிழக்குச் சந்தைக் கடைகள் இல: (1), (2). (3) | கோண்டாவில் கிழக்குச் சந்தை இறைச்சிக்கடை |
|---|---|---|
| (1) கால எல்லை | - 1980-19 5. | 1980 |
| (2) மாத வாடகை | - 100/- | 25/- |
| (3) கேள்விப்பத்திரப் பணம் | - 50/- | 25/- |
| (4) கேள்வி வைப்புப் பணம் | - 100/- | 50/- |
| (5) எதிரே காட்டப்படும் தொகைக்குக்குறைவான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. | - 5000/- | 5000/- |

**க. சபாபதிப்பிள்ளை,**
விசேட ஆணையாளர்,
கொக்குவில் கிராமசபை.

கி. ச. அலுவலகம்,
கொக்குவில்,
18-01-80. 4752

# ஓர் முக்கிய அறிவித்தல்

230 A, நாவலர் ரோட், என்ற இல்லத்தில் அடைவு பிடித்த தி. நவரத்தினம் ஆகிய நான் அடைவுபிடிப்பதை நிறுத்திவிட்டேன் என்றும் என்னிடம் அடைவு வைத்தவர்கள் பங்குனி மாதம் முதலாம் திகதிக்கு (1-3-80) முன் மீட்கப்படாமல் இருக்கும் அடைவுகளை அடைவு துண்டுகளுடன் வந்து மீட்டுக்கொள்ள வேண்டும் என்றும், இந்த அறிவித்தலின் மூலம்கேட்டுக் கொள்கிறேன்.

**தி. நவரத்தினம்,**
முகாமையாளர்.

4745


UNIROYAL

# விற்றுவாக்ஸ் 200

## அதிசய விதைப் பாதுகாப்பி


பாதுகாக்கப்படாதது


பாதுகாக்கப்பட்டது

உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டு எல்லா விதைப் பாவனைத் திட்டங்களிலும் பெரிதும் பயன்படுத்தப்படுவது. விற்றுவாக்ஸ் 200 ஒரு சேதன, பாதரசமற்ற, எங்கும் பரவுகின்ற பங்கசுக்கொல்லி. றைசொற்ரோனியாவினால் ஏற்படும் பூஞ்சணவன் நோய், கித்தியம் முதலியவற்றாலேற்படும் அழுகல் நோய் ஆகியவற்றிலிருந்து முளைக்கும் விதையைப் பாதுகாக்கும் தன்மையுடையது விற்றுவாக்ஸ் 200

விற்றுவாக்ஸ் 200 பங்கசுக் கொல்லி கொண்டு விதைகளைப் பாதுகாத்தால் பெரும் பலனளிக்கும்.

சொற்ப சதச் செலவுடன் உங்களுக்குக் கிடைப்பன.

- சிறந்த முளைகள்
- நோயற்ற பயிர்கள்
- சுகாதாரமான நாற்றுகள்
- மேலதிக அறுவடை
- சிறந்த நிமித்த பயிர்கள்

விதைகளை நடுவதற்கு முன்னால் விற்றுவாக்ஸ் 200 சேர்த்துக் கொள்ளுங்கள்

இரசாயனப்பிரிவு,
[illegible]ராஜா ஓர்கனைசேசன் லிட்.
[illegible] பாங்க்ஷோல் வீதி, கொழும்பு - 11.
தொலைபேசி: 23603.

[illegible] 20 கிறும் பக்கெற்றுகளிற் கிடைக்கும்.

INTASEL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கண்ணைத் திறந்து கொண்டு படுகுழியில் விழுவது போல மனித ஜாதிநன்மையை நன்ருய் உணர்த்தும் தீமையைஉதறித் தள்ளுவதற்கு வலிமையின்றித் தத்தளிக்கிறது.

- பாரதியார்

## மக்கள் கருத்து

## வ. போ. சபையினர் நடவடிக்கை எடுப்பார்களா?

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் வெள்ளாந்தெரு சந்தியிலிருந்த பஸ் நிறுத்துமிடத்தை வட பிராந்திய போக்குவரத்துச்சபை அண்மையில் திடீரென நீக்கியுள்ளது.

பஸ் கம்பனிகள் காலத்திலிருந்தே இந்தச் சந்தியிலிருந்து வந்த இந்த பஸ் நிறுத்தும் இடத்தை இப்போது நீக்கியுள்ளமையினுல் வைத்தீஸ்வர வித்தியாலயம், தனியார் கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் கல்வி கற்க காரைநகர், வட்டுக்கோட்டை, சங்கானை, மானிப்பாய், ஆனைக்கோட்டை ஆகிய இடங்களிலிருந்துவரும் மாணவர்களும் இந்தச் சந்திக்கு அண்மையில் உள்ள தனியார்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களும் பெரும் சிரமம் அடைகிருர்கள்.

எனவே மேற்குறிப்பிட்டவர்களின் சிரமம் போக்கும்வகையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் நீக்கப்பட்ட குறித்த பஸ் நிறுத்தும் இடத்தை மீண்டும் அவ்விடத்திலேயே அமைக்க நடவடிக்கை எடுப்பார்களென பாதிக்கப்பட்டோர் எதிர்பார்க்கின்றனர்.

ச. ராமசுந்தரம்
களபூமி,
காரைநகர்.

## அரச அதிபரை இன்று சந்திப்பர்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகள் காரணமாக எழுந்துள்ள பிரச்னைகளைத் தொடர்ந்து நுகர்ச்சிச் சேவைகள் புதிதாக நியமிக்கப்பட்ட பல. நோ. கூ. சங்க இயக்குனர் சபையிடம் கையளிப்பது குறித்து நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் பதில் தலைவர் திரு. நா. இலட்சுமணராசா தலைமையில் இன்று புதன்கிழமை பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமியையும் யாழ். உதவிக் கூட்டுறவு ஆணையாளரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடாத்தவிருக்கின்றனர்.

ஏற்கனவே கூட்டுறவுச்சங்கச் செயற்பாடுகள் குறித்துப் பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் பதில் தலைவர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபருடன் ஆலோசனை நடாத்தியதுடன் சங்க இயக்குநர் சபை தொடர்பாக எழுந்துள்ள பிரச்னைகள் குறித்துத் தீர்வுகாண உதவுமாறு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சரையும் எதிர்க்கட்சி முதல்வரையும் கடிதமூலம் கேட்டுள்ளார். எழுதிய கடிதத்தின் பிரதிகள் ஜனதிபதிக்கும் பிரதமருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. [அ]

# ஆசியமண்ணில்ஐரோப்பிய அமெரிக்க யுத்தகளம்

மு. திருநாவுக்கரசு
(உதவிவிரிவுரையாளர், வரலாற்றுத்துறை- யாழ். பல்கலைக்கழகம்)

1980 ஆம்ஆண்டு ஆசிய மண்ணில் பெரும் அரசியற் மரபரப்போடு பிறந்துள்ளது. ஒன்று இந்தியத்தேர்தல். மற்றயது ஆப்கானிஸ்தான் பிரச்னை. இன்று ஆப்கானிஸ்தானில் நிகழ்வது போன்ற பிரச்னை வரலாற்றரங்கில் ஒரு புதிய உதாரணமல்ல. இதனை ஒத்த பலசம்பவங்கள் பல கால கட்டங்களிலும் பலநாடுகளாலும் செய்யப்பட்டுள்ளன. இப்பிரச்னையிலுள்ள முக்கியத்துவம் என்னவெனில் உலகில் கடந்தகாலங்களில் நிலவிய யுத்தசூழ்நிலை இன்று தென்னுசியா நோக்கி நகர்த்தப்பட்டுள்ளதாகும். இச்சூழ்நிலைமாற்றம் ஆசியாவிலுள்ள இருபெரும் நாடுகளாகிய சீனுவையும், இந்தியாவையும் யுத்த அபாயத்துக்குள் தள்ளுகின்றது. உலகம் இருபெரும் அணிகளாகப் பிரிந்துள்ளதென்பதை ஆப்கானிஸ்தான் பிரசனை தெளிவாக்கி நிற்கின்றது. ஆசியமண்ணிற்கு நேரஇருக்கும் கதிதான் இங்கு முக்கியமாக நோக்கப்பட வேண்டியது. எவ்வாருயினும் இனிமேல் யுத்த அபாயம் ஐரோப்பாவிலல்ல அது ஆசியாவின் மீதுதான் சுமத்தப்படப்போகிறது. ஆசியமண்ணில் நிகழப்போகும் யுத்தத்தை நடாத்தப் போகிறவர்கள் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள்தான்.

ஆப்கானிஸ்தானில் சோவியத் ரஷ்யா தலையிட்ட போல வரலாற்றில் பலநாகள் வேறுநாடுகளின் பிரச்னையிற் தலையிட்டுள்ளன. ஒவ்வொரு நாடும் இவ்வாறு உள்நாட்டு விவகாரங்களிற் தலையிடும்போது தமது தேசிய நலனை மனத்திற் கொண்டுதான் ஈடுபட்டுள்ளனவேதவிர சர்வதேசநலனை மனதிற் கொண்டல்ல. ரஷ்யா இதற்கு விதிவிலக்கானதல்ல. ரஷ்யா தனது தேசிய நலனை மனதிற் கொண்டுதான் ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் தலையிட்டுள்ளது. வரலாற்றை நோக்கும் எந்த ஒரு நாடும் இதற்கு விதிவிலக்கானதல்ல என்பதனையே கடந்த காலவரலாறு எமக்குப் போதிக்கின்றது. எனவே ஒவ்வொரு நாடும் தத்தம் தேசிய நலன்கள்மீது அக்கறைகொண்டு அவற்றை பாதுகாப்பதற்காகத்தான் இவ்வாருன பிரச்னைகளில் ஈடுபடுகின்றன என்பதை ஒப்புக்கொண்டு அதனடிப்படையில் இப்பிரச்னையை நோக்குதல் தான் பொருத்தமானதாகும். அதுதான் நடைமுறையுமாகும்.

இதுவரைகாலமும் அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, சீனு என மூன்று அணிகளாக சர்வதேச அரங்கம் பிரிந்திருந்தது. ஆனல் ஆப்கானிஸ்தான் பிரச்னையின் மூலம் இந்நாடுகள் திட்டவட்டமாக இரண்டு அணிகளாகத்தானுள்ளன என்பது தெளிவாகின்றது சீனு அமெரிகாவையும் சோவியத்தையும் ஒரே வேளையில் தனித்தனியாக எதிர்த்து வந்தது. சீனுவின் உள்நாட்டு விவகாரங்களில் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக ஏற்பட்டுவந்த மாற்றங்கள் சீனுவை அமெரிக்க அணியோடு இணைத்துள்ளது. இதன்விளைவு அமெரிக்காவின் ஆதிக்கம் ஆசியாவில் வலுவடைந்துள்ளதும், [illegible] அமெரிக்காவின் வல்லரசு வலு ஓங்கியுள்ளமையுமாகும். இக்கட்டத்தில் ஆசியாவில் தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்த சோவியத் ஆப்கானிஸ்தானில் தலையிடுவது சாதாரண வரலாற்றுப் போக்காகும்.

ஆசியாவில் ஆப்கானிஸ்தான் சோவியத்திற்கு ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். 19ம் நூற்றுண்டில் இருதடவையும் பிரித்தானியா ஆப்கானிஸ்தான் மீது படையெடுப்பை மேற்கொண்டபோது ரஷ்யா ஆப்கானிஸ்தானை ஆக்கிரமிக்கப் போகின்றதென்று காரணம் காட்டியே படையெடுப்பை மேற்கொண்டது. எனவே ஆப்கானிஸ்தான் ரஷ்யாவிற்குக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமென்பது அன்றிலிருந்தே உணரப்பட்டுவந்துள்ளது. 1973 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் மன்னராட்சி கவிழ்க்கப்பட்டு டாவுட் பதவியேற்றது தொட்டு ரஷ்யாவின் தலையீடு அங்கிருந்து வந்தது. டாவுட் அரசாங்கத்திற்கு சோவியத் அரசு உதவியளித்து வந்தது. 1965 தொடக்கம் 1979 வரையிலான ஆப்கானிஸ்தான் உள்நாட்டு ஆட்சி நிலைமைகள் குழப்பம் நிரம்பியதாக அமைந்தது.

அமெரிக்காவும், சீனுவும் ஆப்கானிஸ்தானில் அமீன் ஆட்சியைக் கவிழத்துத் தமது சார்பு அரசொன்றை அமைக்கப்போகிருர்களெனச் சோவியத் அஞ்சித்தான் காரியத்தில் முந்திக்கொண்டது. இவ்வாருன அறிகுறிகள் தோன்றியதும் சோவியத் மிகத் தீவிர இராணுவ நடவடிக்கையின் மூலம் தனக்குச் சார்பான பௌறக்கல்மால் என்பவனை ஆட்சியாளஞக அமர்த்தி அவ்வாட்சியைப் பாதுகாப்பதற்காக இன்று வரை உதவி புரிந்துவருகின்றது. பொருளாதார ரீதியாகக் கடந்த காலங்களில் ஆப்கானிஸ்தானுக்குச் சோவியத் உதவிபுரிந்துள்ளதென்பது உண்மையாகும். இப்பிரச்னையில் சோவியத் தனது தேசிய நலனில் அக்கறை கொண்டுதான் சுடுபடுகிறதென்பதும் உண்மையாகும்.

### யுத்த மேகம்

இப்பிரச்னை, உலகரங்கில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைத்தான் இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டும். உலக அரங்கில் ஒரு யுத்தமேகம் கவிழ்ந்துள்ளது. வல்லரசு ஆதிக்கம்வலுவடைந்துள்ளது. அமெரிக்காவை உலகின் முதல்தர இராணுவப் பலமிக்க நாடாக ஆக்குவேனென்று ஜனதிபதி கார்ட்டர் குறிப்பிட்டுள்ளார். உலகின் பொருளாதாரம் ஒரு யுத்த பொருளாதாரமாக மாறிச் செல்கிறது. அமெரிக்கா, சீனு, பாகிஸ்தான், ஜப்பான், மேட்டோ நாடுகள் ஓரணியாகவும், சோவியத் ரஷ்யா, கிழக்கு ஜேர்மன், வியட்னும் போன்றன இந்தியா உட்பட ஓரணியாகவும் பிரிகின்றன. இதில் இந்தியாவின் நிலைமைதான் தர்மசங்கடமானது. இந்தியாவிற்கு எதிரான சீனுவும், பாகிஸ்தானும் அமெரிக்கா பக்கம் கூட்டுச் சேர்ந்துள்ளன. எனவே இந்தியா சோவியத்துடன் கூட்டுச் சேர்வது தவிர்க்கமுடியாதது.

### இந்தியா திண்டாடுகிறது

இந்தியாவிற்குத்தான் பெரும் தலையிடியை [illegible]ள்ளது. இந்தியா சோவியத்தை எதிர்க்கமுடியாமலும், அதே வேளையில் ஆதரிக்கமுடியாமலும் நின்று திண்டாடுகிறது. அமெரிக்கா, சோவியத்திற்கெதிரான தனது யுத்தத்தைப் பாகிஸ்தான் மூலம் செய்ய முற்படுகின்றது. பாஸ்கிதானுக்கு 400 மில்லியன் டொலருக்கு அமெரிக்கா ஆயுதங்களைக் கொடுத்துதவுகின்றது. இவ்வாறு பாகிஸ்தானின் இராணுவ, ஆயுத அதிகரிப்பு அண்டை நாடான இந்தியாவை மிகவும் பாதிக்கும். இந்தியா இதனைக் கண்டு பெரிதும் அஞ்சுகிறது. சீனுவும் பாகிஸ்தானுக்கு ஆயுத, தொழில்நுட்ப உதவி தருவதாகவும், ஆப்கானிஸ்தான் பிரச்னையில் துணிந்து முகம் கொடுப்பதற்காகவும் ஊக்கிவருகின்றது. இவ்வாருகப் பாகிஸ்தானின் பலம் பறவழிகளாலும் அதிகரிக்கப்படுதல் இந்தியாவின் பாதுகாப்பைப் பெரிதும் பாதிப்பதாக அமைந்துள்ளது!

ஆசியாவின் பெரும் நாடுகளாகிய இந்தியாவும், சீனுவும் இராணுவத் தயாரிப்புக்களில் ஈடுபட்டுவருகின்றன. இவ்வாறு ஆசிய நாடுகளை, இராணுவ யுத்தப் பொருளாதாரத்தை நோக்கித் தள்ளியுள்ளன. அமெரிக்கா தனது அபிலாசைகளைப் பாகிஸ்தான் மூலமாக நிறைவேற்ற முயல்கின்றது. மூன்ரும் உலகயுத்தமொன்றை ஆசியாவில்தான் வெடிக்க வைப்போமென்ற ஐரோப்பாவின் அபிலாசை எதிர்காலத்தில் நிறைவேறும் போலத்தான் தோன்றுகிறது. இப்பிரச்னை குறித்து நேரடியாக அனுதாபப்படவேண்டியது தர்மசங்கடமான நிலையிலிருக்கும் வறிய நாடான இந்தியாவைப் பொறுத்ததேயாகும்.

......

## சுகாதாரக் கருத்தரங்கு

(புலோலி)

இலங்கை யாழ். விஞ்ஞான அறிவியல் பரப்புக் கனிஷ்ட சங்கம், பருத்தித்துறை லயன்ஸ் கழகம், கல்வி வட்டம் ஞானசம்பந்தர் கலை மன்றம் என்பன ஒருங்கிணைந்து நடாத்தும் நமது நாட்டில் பரவும் நோய்களும், அவற்றைத் தடுக்கும் முறைகளும்' என்ற பொருள்பற்றிய கருத்தரங்கொன்று இம்மாதம் 31-ம் திகதி நடைபெறவுள்ளது.

புலோலி கிழக்கு ஞான சம்பந்தர் கலைமன்றமண்டபத்தில் இலங்கை யாழ். விஞ்ஞான அறிவியல் பரப்புக்கனிஷ்ட சங்க உப-தலைவர் திரு. கே. நடனசபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது இக்கருத்தரங்கில் யாழ், பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியர் டாக்டர் எஸ். சிவஞான சுந்தரம் (நந்தி) கருத்துரை வழங்குவார். (அ)

......

## "கலைமணி" நாடு திரும்பினுர்

(யாழ்ப்பாணம்)

இசையாளரும் சமயப் பிரசாரகருமான கலைமணி வடிவேல் கடந்த ஐந்து மாத காலம் மலேசியாவின் பல பகுதிகளிலும் இசை நிகழ்ச்சிகளும் உபந்நியாசங்களும் நிகழ்த்திவிட்டு நாடு திரும்பியுள்ளார். (அ)

(5ம் கலத் தொடர்ச்சி)

இன்னும் சுவையான விஷயங்களைத் தாம் கட்டுரையாக எழுதித்தருவதாகச் சொன்னுர்!

பழைய யாழ்ப்பாணத்துச் செல்வாக்கு சிங்கையில் புதிய தலைமுறைக்கு இல்லையாம்!

---ஊர்சுற்றி

## நாடும் நடப்பும்

என்பால்ய நண்பன் ஒருவனைச் சந்திப்பதற்குச் சில தினங்களுக்குமுன் அவன் வீடு சென்றிருந்தேன். அவன் கடைக்குட்டி படுசுட்டி!

என்னைக் கண்டதும், "மாமா நான் ஒரு நொடி சொல்லுறன், அவிழ்ப்பீங்களா?" என்ருன்.

"நொடியைச் சொல்லு பார்ப்போம்" என்றேன்.

"இறங்கினுல் ஏருது; அது என்ன?" அவன் கேட்டான்.

அதற்குப் பதில் எனக்குத் தெரியவில்லை. "சரி நீயே சொல்லு" என்றேன்.

"இது தெரியதா? அது தான் மலம்" (அவன் பச்சைத் தமிழில் சொன்னுன்).

"ஏறினுல் இறங்காதது எது?" என்று அவனைச் சந்தித்துக் கேட்கவேண்டுமென்று இப்போது யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

முன்னர் இருத்தல் ஏழு ரூபாய்சீனிவிற்கப்பட்டபோது தேநீர்க்கடைகளில் தேநீரின் விலையும் திடீரென உயர்த்தப்பட்டது. பின்னர் சீனியின் விலை இருத்தல் மூன்று ரூபாவாகக்குறைக்கப்பட்டபோதும் தேநீரின் விலைகுறையவில்லை. ஆனல் சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு சீனியின் விலை இருத்தல் நாலரை ரூபாவாக யர்த்தப்பட்டதும் திங்கட்கிழமை காலையிலேயே சில கடைகளில் தேநீரின்விலை இருபது சதம் அதிகரித்துவிட்டது.

தேநீர் மட்டுமட்டுமல்ல எந்தப் பொருளின் விலையும் அதிகரிக்கப்பட்டதும் அந்தப் பொருளினதும் அதைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருள்களின் விலைகளும். திடீர் என்று அதிரித்துவிடும் ஆனல் எந்தப் பொருளின் விலையாவது குறைக்கப்பட்டால் அவற்றின் விலை இறங்குவது பெரும்பாடு!

"ஏறினுல் இறங்காதது என்ன?" என்று நொடி போடலாமல்லவா?

ஃ ஃ ஃ

கலைமணி வடிவேலு திடீரென்று நேற்றுத் தரிசனம் கொடுத்தார். "ரொம்பநாளாக ஆளையே காணுேமே!" என்றேன்.

"சிங்கப்பூருக்குப் போயிருந்தேன். நான்கு மாதகாலம் அங்கு சமயம், கலை பற்றிப் போதிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது" என்ருர் கலைமணி.

மலேஷியா, சிங்கப்பூருக்கு இங்கிருந்து போகிறவர்கள் முதலில் வந்து எங்களிடம் சொல்லிவிட்டுத்தான் செல்வார்கள். அங்கிருந்துதிரும்பிய பின் அவர்களைச் சந்திப்பதே அபூர்வம். போகும்பொழுது சொல்லிக்கொள்ளாமல் போய் வந்தவுடன் சந்தித்த கலைமணியைப் பாராட்டவேண்டாமா?

ஃ ஃ ஃ

சிங்கப்பூரில் தொழில் வளர்ச்சி பற்றி நிறையச் சொல்கிருர். அங்கு செல்வம் கொழிக்கிறது. செம்பனை என்று புதியதொரு மரம் வளர்க்கப்படுகிறதாம். திராட்சை போன்று குலை குலையாய்க் காய்க்கிறது அந்தமரம். அந்தப் பழத்திலிருந்து எண்ணெய் தயாரிக்கிருர்களாம். அந்த எண்ணெயிலிருந்து பல பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகிறதாம். அதிலிருந்து நிறை வருமானம் கிடைக்கிறதாம். கிள்ளான் வீதியில் இருமருங்கிலும் தொழிற்சாலைகளைத்தான் காணமுடிகிறதாம்.

வாராவாரம் தமிழ்நாட்டிலிருந்து சினிமாக்கலைஞர்கள் அங்குவந்து பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் போது இங்கிருந்து அங்கு செல்லும் கலைஞர்களுக்கு அதிகவரவேற்பிருக்க முடியாதே என்று எனது ஒரு கேள்விக்குப்பதிலளித்தார், கலைமணி.

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "இன விகிதாசாரம் மாற்றமடையாத குடியேற்றமே ஜனாதிபதியின் விருப்பம்"

## அனலைதீவு வரவேற்பில் 'அமிர்'

(அனலைதீவு)

"இனவிகிதாசாரம் மாற்றமடையாமல்தான் குடியேற்றங்கள் நடைபெறவேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். மகாவலிக் குடியேற்றத் திட்டம் நடைபெறவுள்ள இவ்வாண்டில் நாம் மிகவும் உறுதியாக இருந்து எமது மண்ணைக் காக்கவேண்டும்."

இவ்வாறு எதிர்க்கட்சித் திரு. அ. அமிர்தலிங்கம் அனலைதீவு மக்களால் நேற்றுமுன்தினம் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.



திரு. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் அனலைதீவு இறங்குதுறையில் வந்திறங்கியபோது பெருந்தொகையான மக்கள் வரவேற்று மேளவாத்திய சகிதம் அழைத்துச் சென்றனர். வழிநெடுகலும் பூரண கும்பங்கள் வைத்து மக்கள் அவர்களை வரவேற்றனர்.

அனலைதீவு தெற்கு சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட இவ்வரவேற்பு வைபவத்தைத் தொடர்ந்து பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. அங்கு திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இந்த அரசாங்கத்தில் இரண்டு அமைச்சர்கள் இருந்தபோதிலும் வடக்கே வந்து பிரச்சாரம் செய்ய அவர்கள் துணியவில்லை. இதனால் எங்களை மேய்ப்பதற்காக தேர்தலிலே தோற்கடிக்கப்பட்ட ஒருவரை அரசாங்க அதிபராக நியமித்திருக்கிறார்கள். அவர் அரசியல்வாதியா, அரசாங்க உத்தியோகத்தரா என்று தெரியவில்லை. ஆணுகவும் இல்லாமல் பெண்ணாகவுமில்லாமல் அவர் இருக்கிறார்.

"எம்மீது யாருமே சந்தேகிக்கத் தேவையில்லை. வந்த பாதையை நாம் ஒருபோதும் திரும்பிப்பார்க்கமாட்டோம், முன்னேறத்தான் பார்க்கிறோம். போராட்டம் என்றால் துப்பாக்கி தீர்ப்பதுமட்டுமல்ல; கத்தியின்றி, இரத்தமின்றியும் போராட்டம் நடத்தலாம் அது தேவைப்படும்போது துப்பாக்கி வெடிப்பாகவும் மாறலாம்" என்றார்.

### பண்டிதர் பேச்சு

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

எமதுவாழ்க்கைக்குத்தேவையான அத்தியாவசிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காகவே அரசுக்குஆதரவு வழங்கிவருகிறோம். இந்த ஆதரவினால் எமது போராட்டம் தடைப்படும் என்று சந்தேகம் எமக்கு ஏற்பட்டால் அவற்றைக் கைவிட்டு முழுநேர போராட்டத்தில் குதித்து விடுவோம்.

'இருபத்திரண்டாயிரம் ஆசிரியர்களை நியமித்தார்கள் அவர்களில் 500 பேர் கூடத் தமிழர்கள் இல்லை. விகிதாசாரப்படி வழங்கினால் கூட 4,400 பேருக்கு வழங்கியிருக்க வேண்டும். அப்படித்தான் இல்லாவிட்டாலும் 2000பேரையாவது நியமித்திருந்தால் இன்று எமது பகுதியில் ஆசிரிய பற்றுக்குறையே இருக்காது.

"நாம் எப்பது தேவைகளை இரந்து பெறவேண்டியவர்களாகவே இருக்கிறோம். எமது கையில் ஆட்சி இருந்தால் ஒரு நாளிலேயே எமக்குத் தேவையான ஆசிரியர்களை நியமித்து விடலாம்" என்று கூறினார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன், திரு. தயாபரசிங்கம், திரு. விநாயகமூர்த்தி ஆகியோரும் பேசினார்கள். (கு)

# லீவு குறைப்பை மீளாய்வு செய்க

## ஜனாதிபதிக்கு வேண்டுகோள்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் லீவு நாட்களை குறைக்கும் அரசின் முடிவை மறுபரிசீலனை செய்து முன்னர் போல அவர்களுக்கு லீவு நாட்களை வழங்குமாறு அரசாங்க எழுதுசேவையாளர் காங்கிரஸ் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவைக் கேட்டுக்கொண்டுள்ளது.

அரசாங்க எழுதுசேவையாளர் காங்கிரஸ் தலைவர் திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்சண்ட வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுவரை அரசுக்கு எதிரான எந்த ஒரு நடவடிக்கையிலும் எமது சங்கம் ஈடுபடவில்லை. அண்மையில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கூட சங்கம் பங்குகொள்ளவில்லை என்றும் அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பதிய அலுவலக நேரப்படி காலை 3 மணிமுதல் மாலை 3-30 வரையிலான வேலை நேரத்துக்குப் பதிலாக காலை 8 மணி முதல் மாலை 4-15 மணிவரை 45 நிமிடங்கள் கூடுதலாக வேலைசெய்ய எமது சங்கஉறுப்பினர்கள் தயாராக உள்ளனர். எனவே வேலை நேரத்தைக் கூட்டி லீவுநாட்களையும் அதிகரிக்கவும் என்றும் ஜனாதிபதியிடம் கேட்கப்பட்டுள்ளது. (க)

## இயந்திரப் படகு

(மட்டுநகர்)

நரிப்புலித் தோட்டத்திற்கும் பண்குடாவெளிக்கு மிடையில் இயந்திரப்படகு சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது. பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை இயந்திரப்படகுச் சேவையை ஆரம்பிக்குமாறு 10 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். இச்சேவையை நரிப்புலித்தோட்டம் கிராமமுன்னேற்றச்சங்கம் நடாத்தவுள்ளது. (கு)

# இந்திய லோகசபையின் சபாநாயகர் பால்ராம்

புதுடில்லி, ஜன. 22

இந்திரா காங்கிரசைச் சேர்ந்த திரு. பால்ராம் இந்திய லோக சபையின் சபாநாயகராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி திரு. பால்ராமின் பெயரை முன்மொழிய மக்கள் கட்சி (லோக்தள்) யைச் சேர்ந்த திரு. பகத் வழிமொழிந்தார்.

தற்காலிக சபாநாயகர் திரு. ஜெகஜீவன்ராம் புதிய சபாநாயகரைத் தெரிவு செய்த பின்னர் திருமதி இந்திராகாந்தி முன்னாள் பிரதமர் திரு. சரண் சிங், ஜனதாகட்சியை சேர்ந்த திரு. ரவீந்திர வர்மா ஆகியோர் திரு. பால்ராமின் இருக்கைக்குச் சென்று அவரை அழைத்துச் சென்று சபாநாயகரின் ஆசனத்தில் அமரவைத்தனர். (இ)

# "மக்கள் கடைகள் மூலம் மக்களுக்கு கூடுதல் பலன்"

(யாழ்ப்பாணம்)

"மக்கள் கடை மக்களுக்கு கூடுதலான பிரயோசனத்தைக் கொடுக்கும். கடந்த இரண்டரை வருடங்களாக நாங்கள் உள்ளூர் உற்பத்திகளை கொள்முதல் செய்தலும், விற்பனை செய்வதிலும் கூடுதல் அக்கறை காட்டிவருகின்றோம்."

வட்டுக்கோட்டையில் நேற்று முன்தினம் மக்கள் கடையைத் திறந்துவைத்துப் பேசிய வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர், முதல் பாவனையாளர்களுக்கு தமிழில் ரசீது எழுதிக்கொடுத்து விற்பனையை ஆரம்பித்துவைத்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது: கடந்த 13 வருடத்திற்குமுன் நான் கல்வியை முடித்துக்கொண்டு எம். பி. யாக வந்தபோது வட்டுக்கோட்டைக்கு வந்தேன். அப்போது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. பாலசிங்கம் என்னை வரவேற்றார். இன்று பெருந்திரளான மக்கள் என்னை ஒன்றுதிரண்டு வரவேற்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.

இளைப்பாறிய உத்தியோகத்தர் திரு. வெ. யோகேஸ்வரன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அமைச்சர் மேலும் பேசுகையில் இக்கடைகளை மக்கள் நல்லமுறையில் பயன்படுத்தி வந்தால் முழு ஒத்துழைப்பையும் வழங்குவேன் என்றார்.

இவ்விழாவில் யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி விஜயக்கோன், மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

அச்சுவேலியிலும், திருநெல்வேலியிலும் அமைச்சர் மக்கள் கடைகளை திறந்துவைத்தார்.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்றுமுன்தினம் காலை நல்லூர்கந்த சுவாமி கோவிலுக்குச் சென்று வழிபட்டார். (கொ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தால் நடாத்தப்படும் தேசிய சுவடிக் கூடம் பதிவேடுகள், முகாமை சுவடிகள் பேணும் முறைமை" பற்றிய சொற்பொழிவு இம் மாதம் 25-ம் திகதி மாலை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. ...... (கு)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விற்பனவுவரி வரையறை 5லட்.ரூபாவாக அதிகரிக்கும்'

## அமைச்சர் 'லலித்'திடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"பொருட்களின் விலைகள் பன்மடங்கு அதிகரித்திருப்பதனால் 1978-ம் ஆண்டுக்கான மொத்த விற்பனவு வரியை அறவிடாமல் ஒரு லட்சம் ரூபா வரையறையை ஐந்து லட்சம் ரூபாவாக அதிகரித்து ஐந்து லட்சம் ரூபாவரையறை மொத்த விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்குமாறு வேண்டுகிறோம்."

இவ்வாறு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற யாழ்மாவட்ட வர்த்தகர் கருத்தரங்கில் அகில இலங்கை வணிகர் சங்க யாழ் கிளைத்தலைவர் திரு. த. சங்கரப்பிள்ளை பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசகையில் கூறியதாவது:

"வர்த்தகத் துறைக்கு இன்றியமையாத புகையிரதசேவை யாழ் மாவட்டத்தில் போதுமானதாக இல்லை. ஆதலால் தற்பொழுதுள்ள சேவையை விடமேலதிகமாக இரவு தபால் வண்டிக்குப்பிறகு இன்னுமொரு புகையிரத சேவையை நடத்துவதற்கும் தினசரி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு புகையிரதத்திற்கும் மேலதிகமானபெட்டிகள் இணைப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள்விடுக்க விரும்புகின்றேன்.

"உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மாநகரசபைகளுக்கும் உரித்தான விற்பனை நிலையங்களான சந்தைக் கடைகளைக் குத்தகைக்கு வழங்கும் போது அறவிடும் சந்தைப் பணம் வரிக்கட்டணம் என்பவற்றை அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைக்கு முரணாக அதிகரிக்காமலும் வியாபாரிகளின் வியாபார நோக்கங்களையும் அபிவிருத்தியையும் சீர்குலைக்கும் வகையில் கடைகளை ரெண்டருக்கு விடாமல் நியாயமான ஒரு நீடிய காலத்திற்குத் தற்பொழுது வியாபாரம் நடாத்தும் அதே வியாபாரிகளே அங்கு தொடர்ந்தும் வியாபாரம் செய்யக்கூடியதாக ஏற்பாடு செய்யவும்.

"யாழ்ப்பாண மாநகரசபைக்கு உரித்தான மாதிரிச் சந்தையில் நாளுவித வியாபாரம் நடத்துவதற்கு மாநகரசபை ஆணையாளர் தடைவிதித்திருப்பதால் தனி நபர்களால் நடத்தப்படும் வியாபாரத்தில் வியாபாரி தான் விரும்பியவாறு நாளுவித வியாபாரத்தை நடத்துவதற்கு மாநகர ஆணையாளர் விதித்திருக்கும் தடையை அகற்றித் தருமாறு இத்தால் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

"சீனி, மா என்பவற்றிற்கு உறைகளின் எடை குறைக்கப்படுவதில்லை. சீனி, மா, அரிசி என்பவற்றிற்கு ஏற்றுக்கூலி அறவிடப்படக்கூடாதென அறிவுறுத்தப்பட்டிருந்தபோதிலும் கூலி அறவிடப்படுகின்றது. கூட்டுறவுச் சங்கங்களால் பங்கீட்டு வியாபாரிகளுக்கு வழங்கப்படும் அரிசியில் பூச்சி புழுக்களும் வண்டுகளும் நிறைந்துள்ளன. தோல் மாத்திரம் நீக்கப்பட்டதும் சிவப்பு நிறமுடையதுமான உள்ளூர் அரிசி வழங்கப்படுகிறது. இது பாவனையாளர்களால் உணவுக்குப் பயன்படுத்துவதற்குச் சிறிதும் ஏற்றதல்ல.

"வியாபாரப் பண்டங்கள் தொடர்பான கடன் வசதிகள் பற்றியும் கூட்டுறவுச் சங்கங்கள் அவ்வளவு அக்கறை காட்டுவதில்லை. இது விடயத்தில் விசேட கவனம் செலுத்தி இக்கடன் வசதியைப் பெற்றுத் தருமாறும் ஏற்றுதற் கூலியை அறவிட வேண்டாமென அரசாங்கம் பணித்துள்ள போதிலும் இன்னமும் அறவிடப்பட்டு வரும் கூலிக்குப் பதிலாகச் சில காலத்திற்கு முன் பங்கீட்டு வியாபாரிகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்ட நியாயமான சலுகை ஆகிய போக்குவரத்துக் கட்டணத்தை மீண்டும் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்." (கு)

# மறியல் போராட்டம் தொழிலாளரின் உரிமை

## அரசு இதற்கு உத்தரவாதமளிக்க வேண்டும் என்கிறது ஜனநாயகஉரிமைகள்பாதுகாப்பு இயக்கம்

(கொழும்பு)

எமது அரசியல் அமைப்புத் திட்டத்தில் உறுதியளிக்கப்பட்டது போல் இந்த நாட்டில் இதுவரை தொழிலாளர்கள் அனுபவித்து வந்த அமைதியான மறியல் போராட்ட உரிமைக்கு உத்தரவாதமளிக்குமாறு ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பிற்கான இயக்கம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

அரசாங்க ஊழியர்களின் லீவுநாட்களைக் குறைத்ததை எதிர்த்து உணவு இடைவேளையின்போது மறியல் போராட்டம் நடத்திய அரசாங்க ஊழியர்கள்மீது குண்டர்களும் பொலிசாரும் நடத்திய தாக்குதல் குறித்து ஜனநாக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்க செயற்குழு அண்மையில் கூடி ஆராய்ந்த போதே மேற்கண்டவாறு அரசுக்கு கோரிக்கை விடுத்தது.

ஒழுங்காகவும் அமைதியாகவும் நடைபெறும் மறியல் போராட்டத்திற்கு பொலிசார் ஆதரவு வழங்க வேண்டிய அதே நேரத்தில் வெளியாரின் வன்செயல்களிலிருந்து மறியல் போராட்டம் நடத்துபவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும் மேற்படி இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது

இவ்விவகாரம் தொடர்பாக இயக்கத்தலைவர் லண. லக்ஷ்மன் விக்கிரமசிங்க ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிக்கும் பொலிஸ் அதிபர் திரு. அனசெனவிரத்னவுக்கும் தந்திஅனுப்பியுள்ளார். (அ)

# "இலவச வீட்டுத்திட்டத்திற்கு மறைந்த முதல்வரின்பெயர்"

## பிராந்திய அமைச்சர் அறிவிப்பு

(மட்டக்களப்பு)

"மட்டக்களப்பில் 'இலவச வீட்டுத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இவ்வீட்டுத்திட்டத்திற்கு மறைந்த மட்டுநகர் மாநகர முதல்வர் திரு. திசவீரசிங்கத்தின் பெயரிடப்படும்."

இவ்வாறு மாநகர வீடுகளை உரியவர்கட்கு சொந்தமாக்கும் வைபவத்தில் கலந்து கொண்ட பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை கூறினார். மாநகர ஆணையாளர் திரு. ரி. ராஜகுரு தலைமையில் எல்லை வீதி வீடமைப்புத் திட்டத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் உறுதிகளைக் கையளித்த அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"வீடில்லாப் பிரச்சனையை தீர்க்க அரசாங்கம் எவ்வளவோ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. பிரதம மந்திரி பல திட்டங்களை உருவாக்கி வருகின்றார். சேரி ஒழிப்பு திட்டம், நவீனகிராம திட்டம், சுயவீடமைப்பு திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் வீடற்ற மக்களுக்கு வீடுகளை வழங்கி வருகின்றார்.

"எனது தொகுதியில் கூட பல வீட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றது. எல்லைவீதியில் தற்போது வழங்குகின்ற வீட்டுத்திட்டத்தில் மேலும் 200 வீடுகள் அமைக்கப்படும் இத்திட்டத்திற்கு மறைந்த தலைவர் 'திசவீரசிங்கம் சதுக்கம்' என பெயரிட ஆணையாளருக்கு உத்தரவு இட்டுள்ளேன்" என்றார்.

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திரு. எம். கனகரெட்னம் உரையாற்றுகையில் "இலவசப் பாடப் புத்தகம் வழங்கும்போது இலவச வீடுகளையும் வழங்குகின்ற இவ் அரசாங்கம் மேலும் பல திட்டங்களை உருவாக்கி மக்களின் வாழ்க்கை சுமையை இறக்கும்" என்றார்,

இவ்வைபவத்தில் 165 வீடுகள் உரியவர்கட்கு சொந்தமாக்கப்பட்டன. மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. ஜனாப் பரீட் மீராலெப்பை, தமிழர்விடுதலைக்கூட்டணி பிரமுகரான திரு. சாம்தம்பிமுத்து உட்பட பலர் உரையாறினார்கள். (கு)

# நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் காலஞ்சென்ற பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்களின் நினைவுதினம் இன்று புதன்கிழமையாகும். குருக்களின் சமய சாஸ்திர சேவைகளும் சிவசம்பந்த சிந்தனை வெளிப்பாடுகளும் இன்று தினம் நினைவுகூரப்படுவதுடன் அன்னாருடைய ஆத்மசாந்திக்கு வேண்டிய கிரிகைகளும் புங்குடுதீவிலுள்ள அன்னாரது இல்லத்தில் இடம் பெறுகின்றன. (அ)

# இராஜராஜேஸ்வரன் மீதான வழக்கு ஒத்திவைப்பு

## 24 சட்டத்தரணிகள் ஆஜராகினர்

(யாழ்ப்பாணம்)

1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் நல்லூர்த் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த சுயேட்சை வேட்பாளரான திறனாய்வுக் கழகத் தலைவர் சட்டத்தரணி ராஜராஜேஸ்வரன் தங்கராஜாவுக்கு எதிராகச் சட்டமா அதிபர் தாக்கல்செய்த வழக்கு ஏப்ரல் மாதம் 9ந் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

தேர்தல் நடைபெற்று ஒரு மாத காலத்தில் தனது தேர்தல் கணக்குகளைத் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கத் தவறியதாகக் குற்றஞ்சாட்டித் தாக்கல்செய்யப்பட்டிருந்த வழக்கு, நேற்று யாழ் நீதவான் திரு. இராஜசிங்கம் முன்னிலையில் விசாரணைக் எடுக்கப்பட்டது.

திரு. தங்கராசாவின் சார்பில் எம். சோமசுந்தரத்திற்கு உதவியாக 24 சட்டத்தரணிகள் ஆஜராகினுர்கள். சட்டத்தரணி சோமசுந்தரம் வழக்கின் விளைவுகள் பற்றி எடுத்துக் கூறினர்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் 3 வருடத்துக்குத் தேர்தல்களில் பங்குபற்றமுடியாதென்றும், 77ல் தாக்கல்செய்யவேண்டிய வழக்கை அப்போதே செய்திருந்தால் இப்போது அவர் தேர்தலில் பங்குபற்றும் உரிமையைப் பெற்றிருப்பார். அதனைக் காலந்தாழ்த்திச் செய்ததன் மூலம் இன்னு 3 வருடங்களுக்குப் பங்குபற்ற முடியாதிருப்பதைச் சட்டத்தரணி சோமசுந்தரம் சுட்டிக்காட்டினர்,

உதவித் தேர்தல் ஆணையாளர் திரு. ஜெயரட்ணம் தமது சார்பில் சட்டத்தரணியை நியமிக்க அவகாசம் கேட்டார். (கு)

# "எமது மொழி கலாசார வளர்ச்சியில் அரசு அக்கறை"

(புலோலி)

"நமது கலை, கலாச்சாரம், மொழி என்பன பேணிப் பாதுகாக்கப்படுவதன் மூலம் வருங்காலச் சந்ததியினர் வளமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளலாம்" என்று பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத்தின் 10வது ஆண்டுப் பட்டம் ஏற்றும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வைத்தியக் கலாநிதி எஸ். யோகநாதன் குறிப்பிட்டார். திரு. சிவா. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் பருத்தித்துறைக் கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற இவ் விழாவில் தொடர்ந்து உரையாற்றிய டாக்டர் யோகநாதன் குறிப்பிட்டதாவது:

"எமது அரசாங்கம், கலை கலாச்சாரம், மொழி ஆகியவற்றை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது, இந்துக் கலாச்சாரத்திற்கும், தமிழ் மொழி அமுலாக்கலுக்கும் தனியான அமைச்சொன்றை நிறுவித் தந்துள்ளது. எமது கலை, கலாச்சாரம், மொழி என்பவற்றைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது எமது தலையாய கடமையாகும்."

புதுமைப் பட்டம் ஏற்றும் போட்டியில் ஆர். சுதாகரன் முதலாமிடத்தையும், இ. விஜேந்திரன் இரண்டாமிடத்தையும், தா. நாகலிங்கம் மூன்ருமிடத்தையும், பாரம் பரியப் பட்டம் ஏற்றும் பேசட்டியில் எஸ், ஜெகநாதன் முதலாமிடத்தையும், து. சந்துரு இரண்டாமிடத்தையும், எம். சத்தியபாலா மூன்ருடத்தையும் பெற்றனர்.

இவர்களுக்கான பரிசில்களை டாக்டர் யோகநாதன் வழங்கினர். பருத்தித்துறைத் தேசிய சேமிப்பு வங்கியும், வர்த்தகர்களும் இப்பரிசில்களை இந்து இளைஞர் சங்கத்திற்கு அன்பளிப்புச் செய்திருந்தனர். (அ)

# மேற்றிராணிமார் சங்கத்தலைவர் ராஜினமா

(உடுப்பிட்டி)

இலங்கைக் கத்தோலிக்க மேற்றிராணிமார்சங்கத்தலைவரான காலி மேற்றிராணியார் அதி வந். அன்ரனி டீ சேரம் ஆண்டகை மேற்படி சங்கத் தலைவர் பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

அண்மைக் காலமாக நோய் வாய்ப்பட்டிருந்த ஆயர் அதி. வ. அன்ரனி டீ சேரம் ஆண்டகையை வைத்தியர்கள் ஓய்வெடுக்கும்படி கூறியதைத் தொடர்ந்தே அதன் தலைவர் பதவியை இராஜினமாச்செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இச்சங்கத்தின் பதில் தலைவராக சிலாபம்மேற்றிராணியார் அதி. வந். பிராங் மார்க்கஸ் பெரினண்டோ ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய தலைவர் தெரிவு எதிர்வரும் மே மாதத்தில் நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

யாழ். மாவட்டத்தில்

# ஐ.தே.க.கிளைகள் அமைத்து வேலைவாய்ப்பு நடவடிக்கை

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு ரீதியாக ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைகள் நிறுவப்பட்டு அக்கிளைகளை அலுவலகங்களினூடாக அபிவிருத்தி நடவடிக்கைகளும், வேலை வாய்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி பிரதம அமைப்பாளர் திரு. கே. கணேசலிங்கம் தெரிவித்தார்.

இம்மாவட்டத்திலுள்ள பதினுறு உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளிலும் ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைகள் அமைக்கப்பட்டு இக்கிளை அலுவலகங்களுக்கூடாக வே அவ்வப்பகுதி அபிவிருத்தித் திட்ட வேலைகள் மேற்கொள்ளப்படுவதுடன் இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்பு நடவடிக்கைகளும் செயற்படுத்தப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைக்கப்படும் கிளைகளில் கரையோரப்பகுதி மக்கள், சிறுபான்மைச் சமூக மக்கள், முஸ்லிம் மக்கள் ஆகியோருக்கும் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்படுமென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவுக்கு எதிராக உளவு பார்த்தனராம்

# 3 ரஷ்ய தூதரக அதிகாரிகளை கனடா நாடு கடத்தியது

ஒட்டாவா, ஜன. 22

அமெரிக்காவுக்கு எதிராக உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் கனடாவிலுள்ள சோவியத் தூதரகத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளை கனடா நாடு கடத்தியுள்ளது.

கனடாவிலிருந்து சோவியத் தூதரக அதிகாரிகளை [illegible]வு பார்த்ததற்காக நாடு கடத்தியமை இது இரண்டாவது தடவையாகும்.

அமெரிக்க இராணுவ இரகசியங்களை அறிவதற்காக அமெரிக்க உயர் அதிகாரிஒருவருக்கு இவர்கள் மூவரும் பெருந்தொகைப்பணம் கொடுத்தார்கள் என்று கனடா வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கனடாவிலுள்ள சோவியத் தூதுவரை அழைத்து பேச்சு நடத்திய வெளியுறவு அமைச்சர், குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து நாடு கடத்தும் உத்தரவையும் கையளித்தார்.

நாடு கடத்தப்பட்ட மூன்று அதிகாரிகளும் நாட்டைவிட்டு வெளியேற ஒருவாரகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (இ)

## 124 பயணிகளுடன் விமானம் நொறுங்கியது

தெஹ்ரான், ஜன. 22

124 பேருடன் சென்ற ஈரானிய விமானம் ஒன்று தெஹ்ரானுக்கு வடமேற்குப் பகுதியில் உள்ள மலைப் பிரதேசத்தில் விழுந்து நொறுங்கியது.

உள்ளூர் சேவையில் ஈடுபட்டிருந்த இந்த விமானம் விமானநிலையம் ஒன்றிலிருந்து புறப்பட்ட 50 நிமிட நேரத்தில் விமான நிலையத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதாம். (இ)

## இந்திய - பங்களாதேஷ் உறவு மேலும் வளரும்

### அதிபர் ரஹ்மான் நம்பிக்கை

புதுடில்லி, ஜன. 22

இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான தொடர்பு பல நூற்றாண்டு காலமாக வேரூன்றி வளர்ந்து வருகிறது.

இவ்வாறு பங்களாதேஷ் ஜனாதிபதி ஜனாப் ஷியாவுல் ரஹ்மான் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ஜனாப் ரஹ்மானை இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி நேற்று விருந்தளித்துக் கௌரவித்தார்.

இவ்விருந்தில் கலந்து கொண்டுபேசிய ஜனாப் ரஹ்மான், மேலும் கூறியதாவது:

இந்தியாவும் பங்களாதேஷும் ஜனநாயகத்திலும், மண்டல சார்பின்மையிலும் அதிக நம்பிக்கை வைத்துள்ளன. இதன் காரணமாக இரு நாடுகளுக்கு மிடையிலான உறவு மேலும் மேலும் வளருமென்பதில் ஐயமில்லை. (இ)

ஆப்கான் விவகாரம்

## [illegible]ர்ட்டரின்விசேட தூதுவர் இந்திராவுடன் பேசுவார்

புதுடில்லி, ஜன 22

[illegible]ந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் ஆப்கானிஸ்தான் [illegible] குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அமெரிக்க ஜனாதிபதி திரு [illegible]கார்ட்டரின் விசேட தூதுவர் ஒருவர் இந்தியாவருகிறார்.

திரு. கார்ட்டர் இதற்கான [illegible]டவடிக்கைகளை மேற்கொண்டுள்ளாரென்றும் விசேட தூதுவரின் வருகை பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## ''ரஷ்ய ஈரான் உறவில் விஷம் பாய்ச்ச அமெரிக்காமுயற்சி''

### பிராவ்தா கண்டனம்

மாஸ்கோ, ஜன. 22

எண்ணெய்க் கிணறுகள் உள்ள ஈரான் பிரதேசத்தைத் தாக்கக்கூடிய இடம்வரை சோவியத் மோட்டார் துருப்புகள் கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ளதாக கூறும் செய்தி 'படு ஆத்திரமூட்டலாகும்'.

இவ்வாறு சோவியத்யூனியன் பத்திரிகையான 'பிராவ்தா' தெரிவித்துள்ளது.

புரளியான கட்டுக்கதையை வைத்து வெள்ளை மாளிகை பேச்சாளர் ஒருவர் இது உண்மையாய் இருந்தால் ஈரானின் பந்தோபஸ்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார். இது உண்மையான அச்சுறுத்தல் வரும் திசையை மூடிமறைக்க எடுக்கப்பட்ட சூழ்ச்சியாகுமென்றும் பிராவ்தா தெரிவித்துள்ளது.

சோவியத் - ஈரான் உறவுகளில் விஷம் பாய்ச்ச அமெரிக்கா முனைகிறதென்றும் அப்பத்திரிகை குற்றஞ்சாட்டியுள்ளது.

மத்திய கிழக்கில் எடுக்கவிருக்கும் இராணுவ முஸ்தீபுகளை மூடிமறைக்கவே சோவியத் ஆபத்து எனகூச்சல் எழுப்பப்படுகிறதென்றும் பிராவ்தா கூறுகிறது. ( )

# பாகிஸ்தானை தற்காலிக தளமாக அமெரிக்கா பாவிக்கலாம்

## டாக்டர் கீஸிங்கர் ஆலோசனை

வொஷிங்டன், ஜன. 22

ஈரான், ஆப்கானிஸ்தான் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக அமெரிக்கா பாகிஸ்தானை தற்காலிக தளமாகப் பயன்படுத்தலாம்.

இவ்வாறு அமெரிக்க முன்னாள் வெளிநாட்டமைச்சர் டாக்டர் ஹென்றி கீஸிங்கர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் ஊடுருவல் நடத்திவரும் ரஷ்யா எக்காரணம் கொண்டும் இந்தியாவின் எதிர்ப்பை மீறி ஆப்கானிஸ்தானுக்குள் மேலும் ஊடுருவமாட்டாதென்றும் ஆப்கானிஸ்தானைத் தாக்க முயற்சிக்கமாட்டாதென்றும் டாக்டர் கீஸிங்கர் தெரிவித்தார். (இ)


இப்போதோ எந்தத் தொல்லையும் இல்லை...


நானும் ஒரு பிறிக்ஸ் எஞ்சின் வாங்கினேன். வருடம் 365 நாளும் தொல்லையே இல்லாமல் அதைத் தொடர்ந்து பாவிக்கலாம். அது மட்டுமா? வியாபாரியிடம் ஒரு முழு வருட உத்தரவாதமும் அதற்குக் கிடைக்கிறது.

நான் பிறிக்ஸ் எஞ்சினை வாங்கி மூன்று வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. எனக்கும் எந்தத் தொல்லையும் இல்லை. இப்போதும் அது சிறப்பாக வேலை செய்கிறது. பராமரிப்பதும் சுலபம். ஒரு வருடமா? மூன்று அல்லது நான்கு வருடத்துக்கும் நான் அதற்கு உத்தரவாதம் தருவேன். பாவனையும் சிக்கனம், ஒரு மணி நேரம் இயங்க ஒரு போத்தல் மண்ணெண்ணெய் போதும்..

ஒரு கிராமத்தில் உள்ள சாதாரண இரும்புப் பட்டடையில் கூட மிகச் சுலபமாக பிறிக்ஸ் எஞ்சினைப் பழுது பார்த்துக் கொள்ளலாம்.






மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:
பொறியியல், விற்பனை, சேவைப் பிரிவு,
ஹேலீஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை, கொழும்பு 10.
தொலைபேசி: 96331-6.
HAYLEYS

நடமாடும் பழுதுபார்ப்புச் சேவை வண்டி, தேவையான சகல மாற்றுப்புகளுடனும் கிராமங்களின் [illegible] பயணம் செய்கிறது.






Mel ADS


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் - விஜயகுமாரி
ஸ்ரீதரின்
கொடிமலர்
(புதிய பிரதி)

[illegible] 10-00 2-[illegible]
ஜெமினி - [illegible]த்திரி
கடன் வாங்கி
கல்யாணம்

3-வது ஜனசமுத்திர வாரம்
REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
JAMES COBURN. YORK SUSANNAH
SKY RIDERS
குறிப்பு :- காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் ரிக்கற்றுக்கு முந்துங்கள்.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
எங்கள் தங்க ராஜா (புத்தம்புதிய பிரதி-கலர்)

லிடோ (யாழ்.நகர்) தினசரி: 10-30, 2-15, 4-15, 7-00, & 9-30
போன்: 7693
Zoltan Hound of Dracula

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
கலைஞர் கருணாநிதியின்
பூம்புகார் (புதிய பிரதி)

சாந்தி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
போன்: 7642
26-1-80-ல் 100-வது வெற்றித்தின விழா!
கடைசி வாரம் டாக்ஸி டிரைவர் - கலர்
இத்துடன் "அறிஞர் அண்ணாவின் இறுதியாத்திரைப் பவனி" -நேர்முக வர்ணனை கலைஞர் மு. கருணாநிதி.

ஸ்ரீதர் (யாழ். நகர்)
கடைசி வாரம்
தினசரி காலை 10-30
பி. ப. 2-30, 6-15, 9-45.
சிவாஜி, சுஜாதா, நாகேஷ், விஜயகுமார்
தீபம்
வெள்ளிவிழாச்சித்திரம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தினசரி: 10-30, பி. ப. 2-30, 6-30, 9-30
ஏ. வி. எம். ராஜன், ஜெயசித்திரா,
ஜெய்கணேஷ், அசோகன்
தாயில்லா குழந்தை

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா,
தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்
5-வது ஜனத்திரள் வாரம்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி மங்கையர் கூட்டம் மடை திறந்த வெள்ளம் போல் அலை மோதும் காரணம் யாதோ?
மங்கையர் திலகம் சாவித்திரியுடன்
நாகேஸ்வரராவ்
சேர்ந்து நடித்த
தேவதாஸ் தான் காரணம்
கார்ட்சிகள் குறித்த நேரத்திற்கு முன்பே தொடங்குவதால் தங்கள் ரிக்கட்டுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

# [illegible]ன்றைய பலன்

[illegible] மாதம் 9-ம் திகதி
புதன்கிழமை
(23-1-1980)

மேடம்: நிதி நிலையில் விரும்பத்தக்க முன்னேற்றம் காணப்படும், புதுமையான காரியங்களில் மனதைச் செலுத்துவீர்கள், புத்திரர் [illegible]கழுப் உண்டு.

இடபம்: நீண்ட காலத் தொடர்பொன்றும் இன்று துண்டிக்கப்படலாம், எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றும், சஞ்சலமான செய்திக்கு மிடமுண்டு.

மிதுனம்: சகல துறைகளிலும் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும், வாகனச் சொந்தக்காரர் பெருமையடைவர், வியாபார முன்னேற்றமும் உண்டு.

கடகம்: புதுப் பொலிவுக் கிடமுண்டு, வாழ்க்கையில் வசந்தம் நிலவும், தொழில் துறையிலும் வெற்றியுண்டு.

சிங்கம்: கடிதமொன்று கவலையைத் தரலாம், எதிர்பாராத வகையில் பிணக்குகள் தோன்றலாம், ஆயுதபயமும் உண்டாகும்.

கன்னி: வாழ்க்கையில் தென்றல் வீசும், அன்பர்களின் வருகையும் உங்களை உற்சாகப்படுத்தும், புதிய வாகனமொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

துலாம்: வாழ்க்கை சுமை நிறைந்ததாகக் காணப்படும், நம்பிக்கை வைப்பதன்மூலம் பொருளும் செலவாகும், புதிய தொழில்களை இன்று பின்போடவும்.

விருச்சிகம், கனிவான நினைவுகளின் மத்தியில் இன்று வாழ்க்கை நடத்துவீர்கள், நிருவாக உத்தியோகத்தர் செல்வாக்கு வளர்பிறையாகும், புண்ணிய விருப்புமுண்டு.

தனுசு: எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள், கலைஞர்களுக்கு கனிவான தினம், நன்மைக் காரியங்களும் இடம்பெறலாம்.

மகரம்: புதிய தொழில் முறைகளை மனம் நாடும், நீண்ட பிரயாணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம், தொழிலிலும் லாபமடையலாம்.

கும்பம்: எதிர்பாராதசெலவினங்களால் பாதிக்கப்படுவீர்கள், சிலர் கடன்படவும் நேரிடலாம், தொழிலிலும் தொல்லை தோன்றலாம்.

மீனம்: வைத்திய செலவுகளுக்கு இடமுண்டு, கருத்து வேற்றுமைகளும் இடம் பெறலாம், உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

## நன்கொடை

(மட்டுநகர்)
மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலய இலவச நூல் விநியோக வைபவத்திற்குச் சென்ற மட்டுநகர் முதல்வரும், பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை, தான் கல்வி கற்ற அப்பாடசாலை வாசிகசாலைக்கு ஆயிரம் ரூபாய் நன்கொடை வழங்கினார்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
முத்துச்சிப்பி

# பனஞ் சாராயம் வடிக்க அபிவிருத்திச் சபைக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)
பனங்கள்ளிலிருந்து சாராயம் வடிசெய்து அரச வடிசாலைக்கு வழங்கபனம்பொருள் அபிவிருத்திச்சபைக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று அரச வடிசாலைத் திணைக்கள அதிபர் திரு ஏ. எஸ். பெரேரா தலைமையிலான குழு நிதிமந்திரிக்குச் சிபார்சு செய்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க நிதி அமைச்சர் திரு ரொனி மெல் இக்குழுவை நியமித்திருந்தார்.

பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. என். கனகசூரியர், வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதி திரு. கே. நடராசா, உதவி கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை, டாக்டர் எஸ். மோகனதாஸ் ஆகியோரைக் கொண்ட குழு கட்டைவேலி, தெல்லிப்பழை, வேலணை ஆகிய இடங்களில் இவற்றை அமைக்கலாம் என்று சிபார்சு செய்துள்ளது.

காங்கேசன்துறைத் தொகுதியில் வடிசாலைகட்ட எதிர்க்கட்சித்தலைவரும் காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. ஏ. அமிர்தலிங்கம் பன்முகப்படுத்தப் பட்ட நிதியிலிருந்து 3 லட்சம்ரூபாவைஒதுக்கித்தருவதாக உறுதியளித்துள்ளார். (கு)

# "விவசாயிகளின் பிரச்னைகளை தீர்ப்பதேஎனதுமுதற்கடமை"

## யாழ். மாவட்ட அமைச்சர்

(சுழிபுரம்)
"[illegible]ட பகுதி[illegible] உள்ள விவசாயிகளின் முக்கிய பிரச்னைகளை தீர்த்துவைப்பதே எனது முதல்கடமை. உற்பத்தி செய்யப்படும் மிளகாய், வெங்காயம் விற்பனைசெய்யவும் பொது மக்கள் ஒரே நிர்ணயமான விலையில் வாங்கவும் ஏற்ற ஏற்பாடுகளைச் செய்து வருகின்றேன். உணவுப் பற்றுக்குறை ஏற்படாது காப்பதற்கும் இந்த அரசாங்கம் தம்மாலான சகல நடவடிக்கைகளும் எடுக்கும்."

இவ்வாறு யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் நடைபெற்ற வானொலி விவசாய அறிவுப் போட்டியை ஆரம்பித்துவைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

கமத்தொழிற் திணைக்களத்தினரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினரும் இணைந்து யாழ்மாவட்ட இளம் விவசாயக்கழகங்களுக்கிடையே இப்போட்டியை நடாத்தினர்.

3000 க்கு அதிகமான இளம் விவசாயக்கழகங் களில்இருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் போட்டியில் பங்குகொண்டனர்.

யாழ் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. நா. சிவமுத்துலிங்கம் விழாவிற்குத் தலைமைவகித்தார். யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. என்.பி. ஜெகநாதன் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. எஸ். அருணசலம் உட்பட மற்றும் பலர் பேசினர். (கு)

வயாவிளான்
ஞானவைரவர் ச. ச. நி.

## இன்றைய உதைபந்தாட்டப் போட்டிகள்

(பலாலி)
'ஈழநாடு' ஆதரவில் வயாவிளான் ஞான வைரவர் சன சமூக நிலையம் நடாத்தும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய போட்டியின் 7 வீரர் ஆட்டத்தில் கொழும்புத்துறை-ஜெட் லையின்னேஸ் வி. கழகத்தை எதிர்த்து பலாலி - அண்ணா 'பீ' வி. கழகம் போட்டியிடும் 11 வீரர் போட்டியில் தெல்லிப்பளை-மகாஜன வி. கழகமும், அச்சுவேலி - பனம்பொருள் பயிற்சிப் பாடசாலை வி. கழகமும் கலந்து கொள்ளும்.

### போட்டி விபரங்கள்

7 வீரர் ஆட்டத்தில் ஏழாலை ஜிம்மிகாட்டர் வி. கழகம், ஒட்டகப்புலம் சென்மேரி வி. கழகத்தை 3-1 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது. திரு. எம். ஜெகநாதன் மத்தியஸ்தம் வகித்தார். 11 வீரர் ஆட்டத்தில் தோலகட்டி - மின்னொளி வி. கழகத்தை, கொழும்புத்துறை ஜெட் லையினேஸ் வி. கழகம் 3-1 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது. மத்தியஸ்தராக திரு. எம். பத்மநாதன் கடமையாற்றினார். மற்றுமொரு 11 வீரர் போட்டியில் குளமன்கால் - சென்சேவியர் வி. கழகத்தை, கொக்குவில் - சன்ஸ்ரார் வி. கழகம் 3 - 2 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது. திரு. சி. எஸ். அருள்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். 7 வீரர் போட்டியொன்றில் குட்டியப்புலம் - அம்மன் வி. கழகம் தெல்லிப்பளை - வாலிபர் வி. கழகத்தை 3-0 கோல்களால் தோற்கடித்தது. மத்தியஸ்தராக திரு. எம். ஜெகநாதன் கடமையாற்றினார்.

## டிட்டோ உடல்நிலை: டாக்டர்கள் திருப்தி

பெல்கிரேட், ஜன. 22
இடதுகால் துண்டிக்கப்பட்ட யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோ 2-வது சத்திர சிகிச்சைக்குப் பின்னர் வழமைபோல் இருக்கிறார் என அறிவிக்கப்பட்டது.

இரத்த அழுத்தம், நாடி, நாளம் ஆகியன வழமைபோல் இருப்பதாக டாக்டர்கள் இன்று காலை திருமதி தெரிவித்தனர்.

## பஸ் விபத்து; கிளர்ச்சி: இருவர் பலி!

பம்பாய், ஜன. 22
பம்பாயில் 6 வயதுச்சிறுவன் ஒருவனை பஸ் மோதிப் பலிகொண்டதை அடுத்து அங்கு நடைபெற்ற கிளர்ச்சியின் போது பொலிசார் சுட்டதில் ஒருவர் பலியானார்.

கிளர்ச்சியின் போது 3பஸ்கள் தீயிடப்பட்டன. (இ)

## பத்திரிகையாளர் 'விசா' நிறுத்தம்

புதுடில்லி, ஜன. 22
இந்தியாவில் உள்ள ஆப்கானிஸ்தான் தூதரகம் ஆப்கானிஸ்தானுக்குச் செல்லும் பத்திரிகையாளர்களுக்கு 'விசா' வழங்குவதை நிறுத்தி உள்ளது.

ஆப்கான் அரசின் உத்தரவுக்கிணங்கவே 'விசா' வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாக தூதுவராலய அதிகாரி ஒருவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• விலைகள் அதிகரிக்கவுள்ளன,
• குறைந்த கையிருப்பேயுண்டு.
• இன்றே வாங்குங்கள்!

**FALCON SCOOTERS**

• கவர்ச்சி, சொகுசு, நிறைந்தது
• வர்ண நிறங்களில் கிடைக்கும்

**பல்க்கன் ஸ்கூட்டர்கள்**

பல்க்கன் ஏஜென்சி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685



# ஈழநாடு
EELANAADU
50 சதம்


## இந்திரா காங்கிரஸ்வசம் ஹரியானு?

(புதுடில்லி)

ஹரியானு சட்டசபை முதலமைச்சர் திரு. பஜன்லால், ஜனதா கட்சியிலிருந்து ராஜினுமா செய்து 37 ஜனதா கட்சி சட்டசபை உறுப்பினர்களுடன் இந்திராகாங்கிரஸ் கட்சியில் நேற்று சேர்ந்து கொண்டார் இவர்களின் மனுவை இந்திராகாங்கிரஸ் நேற்று ஏற்றுக்கொண்டது.

## பாகிஸ்தானுக்கு பாரிய ராணுவ உதவி!

(வாஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு இராணுவ உதவிகள் வழங்குவதில் அமெரிக்கா முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் நேற்று, அமெரிக்க பாராளு மன்றத்தில் பேசுகையில்வற்புறுத்தினுர்

அதிபர் கார்ட்டர் தொடர்ந்து உரையாற்றுகையில்; இராணுவ உதவிகளில் ஐந்து வீதம் உடுதலாக மொத்தம் பதினைந்துலட்சத்து எண்ணுயிரம் கோடி டாலர் இராணுவ உதவி பாகிஸ்தானுக்கு வழங்கவேண்டும் என்று நேற்று, அமெரிக்க பாராளு மன்றத்தில் கேட்டுக்கொண்டார்.

அரிசி, மா, சீனி விலையேற்றம்:

# இளைஞர் பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஒரு கரத்தில் இலவச பாடப்புத்தகங்களை வழங்கிவிட்டு மறுகரத்திலிருக்கும் சாப்பாட்டு கோப்பையை தட்டிப்பறிப்பதாகவே அரிசி சீனி மா விலையேற்றம் இருக்கிறது. அரசின் இலவச முத்திரைதிட்டமும் இன்று அர்த்தமற்றதாகிவிட்டது.

தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. மாவை சேனுதிராசா வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது பொருட்கள் விலை ஏறியவுடன் இந்த முத்திரை மூலம் குறைந்தளவு பொருட்களையே மக்கள் பெறுக் கொள்ள முடியும்.

திட்டமற்ற பொருளாதாரக் கொள்கையைக் கொண்டிருக்கும் பிற்போக்கு யூ.என்.பி. அரசு திடீரென அரிசி சீனி, மா ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை ஏற்றியுள்ளது. அரசிடம் வாழ்க்கைச் செலவின் ஏற்றத்தைத் தடுத்துநிறுத்த எந்தத்திட்டமும் இல்லை என்பதையும் சந்தர்ப்பவாதமே அவர்களின் நிவாரணமாகவும் இருப்பதையே மூதலாளித்துவ அரசு வெளிப்படுத்தி நிற்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு மக்கள் அபிவிருத்தியிலீடுபடுபட உணவு தாராளமாகக் கிடைக்க வேண்டும் என்று கூறியவர் இன்று ஜனுதிபதியாக இருந்து கொண்டு விலைவாசிகளை அளவுக்கதிகமாக உயர்த்தி வருவது வியப்பானது. கண்டிக்கத்தக்கது. தாராள இறக்குமதியும் திட்டமற்ற முதலாளித்துவப் பொருளாதாரக்கொள்கையும் தமிழ் மக்களை அடிமையாக்கி வைத்திருப்பதும் இருக்கும் வரை இந்நாடு இவ்வாருன நெருக்கடிக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகும்.

இந்நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கு வெளிநாடுகளில் பொருட்களின் விலையேற்றமே காரணமென ஆட்சியாளர் கூறுகின்றனர். ஆனுல் வெளிநாடுகளில் கொடுக்கப்படும் ஊதியத்தை இந்நாட்டு உழைப்பாளிகளுக்கு இவ்வரசு வழங்குகிறதா? வெளிநாடுகளில் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்குமளவுக்கு இந்நாட்டில் உயர்ந்திருக்கிறதா? என்பதையும் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

இலங்கையில் இன்றைய வரவு செலவுத்திட்டத்தில் ஆயுதப்படைகளுக்கு பாதுகாப்புச் செலவுக்குப் பல கோடி ரூபாய்களை அதிகமாக ஒதுக்கியிருக்கிருர்களே தமிழ் மக்களின் உழைப்பால் தமிழ் ஈழத்தின் மூலவளங்களில் பெறும் பெருந்தொகை இலாபத்தையே தமிழ்மக்களை அடிமைபடுத்தி வைக்கவும் இராணுவத்தையும் ஆயுதப் படைகளையும் குழத்தில் குவித்து வைத்திருப்பதற்கு பயன்படுத்துகிறது அரசு.

எனவே தமிழ்மக்களின் சுதந்திரத்தை அங்கீகரித்துத் தமிழ்மக்களைத் தனியாக விடுவதே அரசின் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கும் ஒரு வழியாகும். தமிழ்மக்கள் தங்கள் வாழ்வைத் தீர்மானிக்கவும் வழியாகும்.

### கேரளத்தில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திராகாங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கு 30 ஸ்தானங்களும், ஜனதாகட்சிக்கு மூன்று ஸ்தானங்களும் கிடைத்துள்ளன.

## வைத்தியசாலை திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி வைத்தியசாலைத் திறப்புவிழா இன்று பிற்பகல் நடைபெறும் வைத்தியசாலையை யாழ். மேயர் திரு. இராஜா விசுவநாதன் திறந்து வைப்பார் திரு. வெ. யோகேஸ்வரன் எம். பி. ஆசியுரை நிகழ்த்துவார்.

## "அன்பு அருள் பெற..."

[சாவகச்சேரி]

"அகத்திலும் புறத்திலும் அழகு கண்டாலே அன்பு அருள் நிறையும். இந்தஆலயத்தில் அடியார்கள் பயபக்தியுடன் கோலம்செய்து வழிபடுவதுபோற்றக் கூடியது"

இவ்வாறு சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் கு. வி. மகாலிங்கம் சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற சுக்கிரவார திருவிழாவில் பேசிய போது கூறினுர். அவர் தொடர்ந்து பேசுகையில் "பாடியும், ஏற்றியும் வழிபடும் பாக்கியம் எமக்கு தொடர்ந்தாலே பிறவி நீங்கி அருள் நிலைக்கும் என்ருர்.

சைவப்பெரியார் திரு. வீ. சின்னையா தலைமையில் நடைபெற்றஇவ்விழாவில்பண்டிதை திருமதி உமையாள் உட்பட பலர் உரையாற்றினர். [ஈ]

# கொள்ளை இலாப வர்த்தகர்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் உங்களுக்கு உதவுவோம்.

### சிறைக்கு அனுப்புவேன்

"மிளகாயை நீங்கள் உற்பத்தியாளரிடமிருந்து கொள்முதல்செய்யும்போதுஅவற்றை உடனுக்குடன் அன்றைய விலையில் விற்ருல் சரி. கூடிய விலைக்கு விற்பதற்காக கொள்முதல்செய்த மிளகாயை பதுக்கிவைத்து இயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வர்த்தகர்களை சிறைக்கு அனுப்புவேன்!

"வர்த்தகர்கள் ஒன்று அல்லது இரண்டு பொருள்களை மட்டும் வைத்து லாபம் அடையாமல், வியாபாரத்தை விஸ்தரித்து பல பொருள்களை விற்பனைசெய்து லாபம்பெற வேண்டும். ஒரு பொருளால் மட்டும் கூடிய லாபம் பெற முடியாது.

வர்த்தகர்கள் பல்வேறு பொருட்களையும் போட்டி போட்டு விற்கவேண்டும். இரண்டு, மூன்று வியாபாரிகள் சேர்ந்து விருப்பிய விலையை நிர்ணயித்து, லாபம்அடையும் சந்தர்ப்பமும் இருக்கும்.

### போட்டி வேண்டும்

அரச விற்பனை நிலையங்கள், கூட்டுறவு சங்கங்களுடன் நீங்கள் போட்டி போட்டு வியாபாரத்தை பெருக்கிக்கொள்ள வேண்டும். அரசு எல்லோருக்கும் பொருட்களை சமமாக வழங்கும் எல்லா வர்த்தகர்களுக்கும் நாம் உதவியளிப்போம்.

5 வருடத்திற்கு முன்னர் இயங்கிவந்த வடபகுதி விளை பொருள் உற்பத்திச்சங்கத்தை மீண்டும் மக்களிடம் ஒப்படைக்கும்படி கடந்த 2 தினங்களாக மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, சிறிய வர்த்தகர்களுக்கு வருமானவரி கட்டுவதுபற்றி தகுந்த அறிவு இல்லையென்றும் அதற்கென்ன செய்வதுஎன்றும் எனக்கு மனுச்செய்துள்ளார்கள்.

### சிறிய வர்த்தகர்கள்

சிறிய வர்த்தகர்களின் கஷ்டங்களைத் தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளேன். நீங்கள் கொழும்புக்கு வராமலே, இங்கு பிரதான கணக்காளர்களை அனுப்பி உங்கள் பிரச்னைகளைத் தீர்க்க நடவடிக்கைஎடுப்பேன். அவர்கள் யாழ்.மாவட்டத்திற்கு வரும்போது உங்களுக்கு உதவிபுரிவார்கள்.

"நான் நீர்வேலிக்குச்சென்ற போது அங்குள்ள வாழைப்பழ உற்பத்தியாளர்கள், நான் அமைச்சராக வருமுன்னர் தங்கள் சங்கத்தை மூடவேண்டிய நிலை இருந்ததாகவும், நான் அமைச்சராக வந்தபின்னர் நல்லதாக நடப்பதாகவும்கூறினுர்கள்.

தேசிய வியாபார தினமொன்றுகொண்டாடவேண்டுமென்ற கோரிக்கையையும் விடுத்தார்கள், வியாபாரம் தினமும் நல்லாக நடப்பதினுல் வருடத்தில் முழுநாட்களும் தேசிய வியாபாரதினமாக இருக்குமென்று அவர்களிடம் கூறினேன்.

### கடவுளாலும் தடுக்கமுடியாது

இன்று உலகில் எண்ணைவிலை நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது. இதனைக்கடவுள் வந்தாலும் தடுத்துநிறுத்திவிட முடியாது. வீணுதம் ஒவ்வொரு துளி எண்ணையும் எங்களுக்கு மட்டுமல்ல, உலகிற்கே ஏற்படும் நட்டமாகும்.

"1979ம் ஆண்டிலும்பார்க்க கூடியளவு எண்ணையை இறக்குமதி செய்வதில்லையென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. லொறிகளை சிக்கனமாகப் பாவியுங்கள். கொழும்புக்கு வெறும் லொறிகளை அனுப்பாதீர்கள். லொறி போகும்போதும் வரும்போதும், சாமான்களைக் கொண்டுசெல்ல வேண்டும். வெறும் லொறிகள் ரூேட்டில் நடமாடுவதால் பெரும் நஷ்டம் வரும். மற்றும் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எண்ணைவிலையும் ஒருகாரணமாகும், எண்ணைப்பிரச்னை உலகிற்கு ஒரு எச்சரிக்கையாகும். ஆதலால், நாம் எந்த மதத்தைச்சேர்ந்தாலும்,எந்தஇனத்தைச் சேர்ந்தாலும், எக்கட்சியைச் சேர்ந்தாலும் எண்ணையைச் சிக்கனமாகப் பாவிக்க வேண்டும். எண்ணைக்குப் பதிலாக ஒரு மார்க்கம் கிடைக்கும்வரை நாம் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும்"

### தமிழில் கூறியது

அமைச்சர் லலித் அத்துலத்முதலி தமிழில் உரையாற்றுகையில் கூறியதாவது: 'வர்த்தகம் எல்லோருக்கும் பொதுவானது. சாதிமத வேறுபாடுகளை வர்த்தகத்தில் பாவிப்பதல்ல. வர்த்தகம் லாபநஷ்டத்தோடு தொடர்புகொண்டது. ஆகவே வர்த்தகர்கள் அனைவரும் ஒற்றுமையாக பாவனையாளர்களுக்கு நல்லமுறையில் சேவைசெய்யவேண்டும், அதனுல்தான் இவ்வளவு ஒற்றுமையாக இங்கு கூடியிருக்கிறீர்கள்.

'இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் வர்த்தகர்கள், பாவனையாளர்களுக்கு சேவைசெய்து வருகின்றனர். இது அவர்களின் முக்கிய கடமையாகும். மலைநாட்டுஉற்பத்தியாளரும், யாழ்ப்பாண உற்பத்தியாளரும், உற்பத்தியில் விசேட அக்கறை கொண்டுள்ளார்கள். நாட்டில் எல்லாப் பாகங்களிலுமுள்ள வர்த்தகர்களின் ஒத்துழைப்புத் தேவை.

### நியாயமான விலை

'உற்பத்தியாளருக்கு நியாயமானவிலை வழங்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். பாவனையாளர்களுக்கு நீங்கள் குறைந்த விலையில் பொருட்களை வழங்கவேண்டும்.

'வர்த்தகர்கள் போட்டிஏற்படுத்தி வியாபாரம்செய்ய வேண்டும். தனிப்பட்டவர்த்தகர்கள் போட்டியில் கலந்துகொள்ளவேண்டும். இந்த முறையில் பாவனையாளர்களுக்குசேவை செய்வார்களென எதிர்பார்க்கிறேன். உங்கள் பிரச்னைகளை பரிசீலனைசெயய ஆயத்தமாக இருக்கிருேம்.

(கொ)


## தேவை

### பாலர் பாடசாலை ஆசிரியை

காரைநகர் ஊரிக் கிராமத்திலுள்ள பாலர் பாடசாலைக்கு அனுபவமுடைய பாடசாலை ஆசிரியை தேவை.

பின்வரும் தகமையுடையவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

1. ஜீ. சி. இ. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்தவராயிருத்தல் வேண்டும்.
2. குறைந்தது 3 வருட பாலர் பாடசாலை ஆசிரியை அனுபவம் இருத்தல்வேண்டும்.
3. 35 வயதுக்கு உட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 30-1-80ம் திகதியன்ருே அல்லது அதற்கு முன்பாகவோ கீழே தரப்படும் முகவரிக்கு கிடைக்கும்படியாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

### சோப் தயாரிப்பதில் அனுபவமுடைய தொழிலாளர்

1. சோப் தயாரிப்பதில் குறைந்தது 5 வருட அனுபவம் இருத்தல்வேண்டும்.
2. ஜீ. சி. ஈ. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்தவராயிருத்தல்வேண்டும்.
3. 35 வயதுக்கு உட்பட்டவராயிருத்தல்வேண்டும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தமது விண்ணப்பங்களை கீழே தரப்படும் முகவரிக்கு 30-01-80 திகதியன்ருே அல்லது அதற்கு முன்பாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

**சமூக அபிவிருத்திப் பணிப்பாளர்**
சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்,
காரைநகர். 4759


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. GE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org